3. கவன ஈர்ப்பு.

(அ) பழனி வட்டம் பழைய ஆயக்குடியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டிட வசதி இல்லாதது குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை மாண்புமிகு கல்வியமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார், திரு. ஆ. சுப்புரத்தினம்.

முற்பகல் 10-45

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பழனி வட்டம் பழைய ஆயக்குடியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு போதிய கட்டட வசதி இல்லாதது குறித்து'' மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தமிழகத்தில் ஏறத்தாழ 2,700 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் செயல்படுகின்றன. அவற்றுள் பாதிக்கு மேற்பட்ட பள்ளிகளுக்கு போதிய கட்டட வசதிகள் இல்லை. 600—க்கு மேற்பட்ட பள்ளிகள் 60 வருடங்களுக்கு மேலாக செயல்பட்டு வருகின்ற காரணத்தினால், அதன் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவைகளையும் அரசு புதுப்பிக்க வேண்டிய அவசிய நிலையில் உள்ளது.

திண்டுக்கல் அண்ணா மாவட்டம், பழனி வட்டம், பழைய ஆயக்குடியில் அரசு உயர்நிலைப்பள்ளி 11—8—88-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. அப்பள்ளியில் 323 மாணவர்கள் பயின்று வருகின்றனர். அப்பள்ளிக்கென கட்டடக் குழுவும், பெற்றோர்—ஆசிரியர் சங்கமும் இணைந்து கூரைக் கட்டடம் கட்டிக் கொடுத்துள்ளர்கள். இப்பள்ளிக்கென சொந்த நிலமில்லாத காரணத்தினால். பஞ்சாயத்து யூனியன் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கென நிலம் கையகப்படுத்த திண்டுக்கல் அண்ணா மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் முயற்சி எடுத்து வருகிறார். எனவே நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட பிறகு கட்டடங்கள் கட்டுவது குறித்து அரசு நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலித்து ஆணையிடும்.

அரசு ஆண்டுதோறும் பள்ளிக் கட்டிடங்களுக்கு நிதிஒதுக்கம் செய்து வருகிறது. நடப்பு நிதி ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் ரூ. 75 லட்சம் பள்ளிக் கட்டடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது,

கவன ஈர்ப்பு
[திரு. இராம வீரப்பன்]

[1991 செப்டம்பர் 27

மேலும் வீட்டு அபிவிருத்தி கழகத்திடமிருந்து ரூ. 175 லட்சம் நிதியுதவி பெற்று பள்ளிக் கட்டடம் கட்டவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்ட அரசு முதன்மை நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை''

என்ற குறள் ஆசானின் கருத்துக்கிணங்க, இந்த நிதிநிலை ஒதுக்கீட்டில் சற்றொப்ப 1,330 கோடி ரூபாயை தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கல்வி இலாகாவுக்கு ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த சூழ்நிலையிலே இந்த ஆயக்குடியிலே உள்ள இந்த உயர்நிலைப் பள்ளியானது முதலிலே நடுநிலைப் பள்ளியாகத்தான் இருந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது அது உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது. பிறகு வந்த கருணாநிதி அரசு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் அது நடுநிலைப்பள்ளி.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நடுநிலைப் பள்ளியாக இருந்தபோது எந்த நிலையிலே இருந்ததோ அதே நிலையிலேதான் இருக்கிறது, ஆயக்குடி பேரூராட்சியானது 75 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்ட ஒரு பேரூராட்சி. அங்கே அது ஒரு கோ எஜூகேஷன் பள்ளி. அங்கே கட்டிட வசதிகள் இல்லை; விளையாட்டு மைதானம் இல்லை. 'லேப்' வசதி இல்லை. மேலும் ஒரே ஒரு லேவட்டரிதான் உள்ளது. அதைத்தான் இருபாலாரும் பயன்படுத்த வேண்டிய ஒரு அவல நிலை உள்ளது. எனவே, ஏதாவது முன்னுரிமை கொடுத்து இப்பேர்பட்ட நிலைமைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரிசெய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போன்று 1,300 கோடி ரூபாய் இப்போது கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும் கட்டடங்கள் கட்டுவதற்கு என்று 75 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்களே பார்த்திருப்பார்கள்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் சுமார் 600-க்கு மேற்பட்ட பள்ளிகள் இப்படிப்பட்ட கட்டடங்கள் இல்லாத சூழ்நிலைக்கு உட்படுத்தப்பட்டு மிக அவசரமாகப் பழுதுபார்க்க வேண்டிய சூழ்நிலையிலே கட்டடம் கட்ட வேண்டிய சூழ்நிலையிலே உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இதற்கு சுமார் குறைந்த மதிப்பீடு போட்டாலும் 80 கோடி ரூபாய் வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிதி நிலைமையில் நெருக்கடி மாத்திரம் அல்ல வழக்கமாகவே அந்த ஆண்டுதோறும் கல்வித் துறைக்கு கட்டடத்திற்காக சுமார் 1½ கோடி ரூபாய் அல்லது 2 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இன்னும் 6 மாத காலத்திற்கு 75 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர வீடு அபிவிருத்திக் கழகத்திடமிருந்து ரூ. 175 லட்சம் பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே இந்த நிதி ஒதுக்கல் மசோதா நிறைவேறியவுடன் இந்த ஆண்டு எந்தெந்த பள்ளிகளுக்கு முன் உரிமை வழங்கி கட்டடம் கட்டுவது என்று அரசு ஆராய்ந்து முடிவெடுக்கிறபோது இந்த ஆயக்குடியில் அமைந்துள்ள இந்தப் பள்ளிக்கு கட்டடம் கட்டுவது பற்றியும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வீராணம் ஏரி நீர் பாயும் வாய்க்கால்களில் வளர்ந்துள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடியினால் விவசாயிகள் பெருமளவு பாதிப்புக்குள்ளாகி இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு.

திரு. ச. அழகிரி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வீராணம் ஏரியிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் பாயும் வாய்க்கால்களில் நெய்வேலி காட்டாமணக்கு என்ற செடி வளர்ந்துள்ள காரணத்தால் தண்ணீர் பாய்வது குறைந்துள்ளதால் விவசாயிகள் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பது குறித்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS